செ. கு. எண்:039 நாள் :15.02.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 15.2.2014

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், பேரளம் சரகம், நெடுங்குளம் கிராமத்தைச் சேர்ந்த இரு பிரிவினருக்கு இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக 3.1.2014 அன்று ஐந்து நபர்களை அந்தக் கிராமத்தில் காவல் துறையினர் விசாரணை செய்து வந்த நிலையில், திரு. மாரிமுத்து என்பவரின் மகன் பிரவீன் பூச்சிச்கொல்லி மருந்தினை அருந்தி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த பிரவீன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த பிரவீன் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9